இல்லை. அங்கேயிருக்கின்ற அலுவலர்கள்கூட தங்களிடம் இருக்கும் பணத்தை வைத்துக் கொள்வதற்கு ஒரு இடம் இல்லாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவேதான் இதனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள இயலாது என்பதைக் குறிப்பிட்டேன்.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் காட்டுப்புத்தூர் பகுதியிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை விடுவதற்கு எவ்வளவு விதிமுறைகள் இருக்க வேண்டுமென்பதைச் சொன்னார்கள். நான் அவர்களைப் பணிவோடு வேண்டிக் கொள்வதெல்லாம், புதிய பேருந்து வழித் தடங்களை விடுவதற்கு அதிகச் சிரமங்கள் இருந்தாலும் முசிறியிலிருந்து ஒரு பேருந்து தினமும் இரவில் சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது. அந்தப் பேருந்தையாவது எக்ஸ்டென்ஷன் செய்து காட்டுப்புத்தூரிலிருந்து புறப்படுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையேதான் நான் குறிப்பிட்டு சொன்னேன். இவ்வளவு கிலோ மீட்டர் ஆகின்றது. அதனுடைய பயணம் இரவு நேரங்களிலே இவ்வளவு குறிப்பிட்ட வேகத்திலேதான் வரமுடியும் என்று இருக்கிறது. ஆகவேதான் சாத்தியக்கூறு இல்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வற்புறுத்திக் கூறுகின்ற காரணத்தினால் நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து அதை இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 128, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

128—

குன்னூர் தொகுதியில் விசைத்தறி அமைத்தல்.

*10287—டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

குன்னூர் தொகுதியில் விசைத்தறி அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

1993 மார்ச் 18]

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அதுவும் குன்னூரில் அந்த சீதோஷ்ண நிலை மிகவும் அருமையான சீதோஷ்ண நிலை ஆகும். அங்கே ஸ்வெட்டர் பின்னக் கூடிய நூல் இழைகள் சுருங்குவதும் இல்லை. விரிவடைவதும் இல்லை. அந்தச் சூழ்நிலையில் உருவாக்கப்படும் ஸ்வெட்டர்கள் மிகவும் குறைந்த விலையில் சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கும் தனியார் ஒருவரால் பின்னப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. அதையே அரசு எடுத்துக்கொண்டு அதைப்போல ஒரு ஆலை அமைத்தால் நாம் இராணுவத்திற்குக் கூட அதிக அளவில் ஸ்வெட்டர்களை வழங்கலாம். பல பேருக்கு வேலை கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே அதை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி விசைத்தறி அமைப்பது பற்றியதாகும். இவர் ஸ்வெட்டர் தயாரிப்பது பற்றிக் கேட்கின்றார். அதற்குத் தனி கேள்வி போட்டால் பதில் தர இயலும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 129, திரு. தா. செழியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

129—

பூலாம்பாடி பேரூராட்சி கலிங்கம் நீரோடைத் திட்டம்

*9144—திரு. தா. செழியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா —

(அ) பெரம்பலூர் வட்டம் பூலாம்பாடி பேரூராட்சியின் கலிங்கம் நீரோடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?